[2020 மார்ச் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. M.S.R. ராஜவர்மன் அவர்கள்.

திரு. M.S.R. ராஜவர்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளால் நான் விவசாயிகளுக்காகவே நான் என வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், குடிமராமத்து நாயகன் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர், ஜல்லிக்கட்டு நாயகன் அருமை அண்ணன் OPS அவர்களையும், தமிழகத்தினுடைய பால் வளத் துறை அமைச்சர் எங்கள் ஆருயிர் அண்ணன் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களையும் வணங்குகிறேன். சாத்தூர் நகரில் மின்வாரியத்தில் செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க தங்க மனம் கொண்ட எங்கள் அருமை அண்ணன் திரு. தங்கமணி அவர்கள் முன் வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு தேவையிருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

139—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***10359—திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2020 மார்ச் 20]

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஒன்றியம், வி. முத்துராமலிங்காபுரம் கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஒன்றியம், வி. முத்துராமலிங்காபுரம் கிராமத்தில் 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ள நிலையில் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களை வணங்குகிறேன். விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஒன்றியம், வி. முத்துராமலிங்காபுரம் கிராமத்தில் சுமார் 1,500 மக்கள் வாழ்கின்றனர். அந்தப் பகுதியையொட்டி 400 மக்கள் தொகைக் கொண்ட காலனி ஒன்று இருக்கின்றது. அந்தக் காலனியிலே வசிக்கின்ற மக்களெல்லாம் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள். அவர்கள் காலை 6–00 மணிக்கு வேலைக்குச் சென்றால் இரவு 8–00 மணிக்குத்தான் வருகின்றனர். வந்தவுடன் தண்ணீரைத் தேடி அலைகின்றனர். அந்தப் பகுதியிலே குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாத காரணத்தினால் அவர்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே, அவர்களுடைய சிரமத்தைக் கருதி அங்கு 30,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட ஒரு தொட்டி தனியாகக் கட்டிக் கொடுத்து, போர்வெல் அமைத்துக் கொடுத்து குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வி. முத்துராமலிங்காபுரம் ஊராட்சியிலே வி. முத்துராமலிங்காபுரம், சோரம்பட்டி, பொத்துசெட்டிப்பட்டி ஆகிய 3 உட்கிடை கிராமங்கள் உள்ளன. வி. முத்துராமலிங்காபுரம் கிராமத்தின் மொத்த மக்கள்தொகை 990 ஆகும். இக்கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், 10,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி என மொத்தம் ஒரு இலட்சத்து 30,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. மேலும், 3 சிறு மின் விசைப் பம்புகளும், 4 கைப்பம்புகளும் பயன்பாட்டில் உள்ளன. இக்கிராமத்திலுள்ள மக்கள் தொகைக்கேற்ப நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் 54,450 லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. தற்போது நபர் ஒருவருக்கு 58 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆனால், இக்கிராமத்தில் கண்மாயிலுள்ள கிணற்றிலிருந்து மின் மோட்டார்மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மட்டுமே நீரேற்றம் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதைத்தவிர இதே கிராமத்தில், அருந்ததியர் காலனியிலுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தற்போது போதிய நீராதாரம் இல்லை. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே, இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்யும் வகையில் 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் நீராதாரம் மற்றும் pipeline அமைக்கும் பணிகளை மேற்கொள்ள தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, வி. முத்துராமலிங்காபுரம் கிராமத்தில் போதிய அளவு குடிநீர் வழங்கப்படுவதால், கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய அந்த

2020 மார்ச் 20]

10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 2010–2011 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட தொட்டியாகும். இன்றைய தேதி வரையிலே தண்ணீர் ஏற்றப்படவில்லை. அந்தத் தொட்டி பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால் அந்தத் தொட்டியில் தண்ணீர் ஏற்றுவதற்கு வாய்ப்பில்லை. எனவேதான், புதிதாக ஒரு தொட்டி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து அங்கே ஒரு தொட்டியைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விருதுநகர் ஒன்றியத்திலிருக்கக்கூடிய மூலிப்பட்டி ஊராட்சியில் சங்கரலிங்கபுரம் காலனியில் இருக்கக்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்த நிலையில் இருக்கின்றது. அந்தத் தொட்டிக்குக் கீழே மாணவர்களும், பள்ளிக் குழந்தைகளும் சென்று விளையாடுகின்ற காரணத்தினால், அந்தத் தொட்டி எந்த நேரத்திலும் விழுந்து விடக்கூடும் என்ற காரணத்தினால், அதையும் மாற்றி கட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சத்திரரெட்டியாபட்டி ஊராட்சியில் இருக்கக்கூடிய காமராஜர் காலனியிலும் அதே நிலைதான் இருக்கின்றது. தொட்டியின் நான்கு கால்களின் கம்பிகள்தான் தெரிகின்றன. எந்த நேரத்திலும் விழுந்துவிடக் கூடும் என்பதற்காக அதையும் மாற்றி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் எந்தக் கிராமத்திலும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாமல் இல்லையென்று சொல்லக்கூடிய வகையில், அன்றையதினம் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாக வந்து, எந்தக் கிராமத்திற்குத் தொட்டி தேவை என்பதை அறிந்து, அங்குள்ள மக்கள்தொகைக்கேற்ப தொட்டியைக் கட்டிக்கொடுத்தார்கள். அதேபோன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைய சூழ்நிலையில், எங்கெல்லாம் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் மக்கள் தொகைக்கேற்ப கட்டிக் கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று, கடந்த ஒன்றாம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விருதுநகருக்கு வந்து, மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்கள். நாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டைக்கு புதிய குடிநீர்த் திட்டத்தை அறிவித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: ஒரு நிமிடத்தில் பேசிவிடுகிறேன். அதேபோன்று, 2011 ஆம் ஆண்டு எங்களுடைய கழகத்தின் தலைவர் அன்றைய துணை முதல்வராக இருந்தபோது, இன்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்ட அந்தத் திட்டத்திற்கு ஆலங்குளத்தில் அடிக்கல் நாட்டினார்கள். நீண்ட நாட்களுக்குப் பின்பு கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்குப் பின்பு, அந்தத் திட்டம் வந்ததற்காக மகிழ்ச்சியடைகின்றோம். அந்தத் திட்டத்திலே குழாய்கள் பதிக்கப்படும்போது மூன்றடி தோண்டி பதிக்கப்படுவதற்குப் பதிலாக மேலோட்டமாக ஒன்றரை அடி தோண்டி பதித்த காரணத்தினால் நீரேற்றும்போது pressure காரணமாக குழாய்களெல்லாம் வெளிவந்து தண்ணீர் வெளியேறிக்கொண்டிருக்கிறது. அந்தக் குழாய்களையும் சரி செய்து, மக்களுக்குச் சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். சத்திர ரெட்டியாபட்டி ஊராட்சியிலே, காமராஜர் காலனியிலே உள்ள குடிநீர்த் தொட்டி பழுதடைந்திருப்பின், துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். அதேபோல, அருகிலிருக்கக்கூடிய சங்கரலிங்கபுரம் காலனியிலும் குடிநீர்த் தொட்டி பழுதடைந்திருப்பதாகச் சொன்னார்கள். அதுவும் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அங்கே வந்து அடிக்கல் நாட்டினார்கள் என்று சொன்னார்கள். அது எங்களுடைய கோரிக்கை என்றார்கள். மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் பல்வேறு நேர்வுகளில் வலியுறுத்தி, அந்த மாவட்ட மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்ததன் காரணமாக அந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டினார்கள்.

2020 மார்ச் 20]

அதுமட்டுமல்லாமல் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, அதற்குப் பின்னர் நாங்கள் திறந்து வைத்ததாகச் சொன்னீர்கள். அதாவது 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை அறிவித்தீர்கள். அவ்வளவுதான். 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும் நிதியொதுக்கி, அரசாணை வெளியிட்டது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். விருதுநகர், மேலூர், வேலூர் போன்ற இடங்களெல்லாம் அந்த 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் அடங்கும். அதற்கெல்லாம் அரசாணை வெளியிட்டது அம்மாவின் அரசு; நிதி ஒதுக்கியது அம்மாவின் அரசு. அதற்குப் பிறகு, முழுமையாக அந்தத் திட்டங்களைக் கொண்டுவந்தது அம்மாவின் அரசு என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மொத்தம் 21,082 தொட்டிகள் இருக்கின்றன. உங்களுடைய மாவட்டத்தில் மட்டும் கிராம ஊராட்சிகளில் கிட்டத்தட்ட 2,205 தொட்டிகள் உள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக இதுவரையிலும் இல்லாத அளவிற்கு, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதைவிட, மிக அதிகமாக, கிட்டத்தட்ட இரண்டு மடங்குக்குமேல் 29,348 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. எங்கே அவசியமோ அங்கே கட்டப்பட்டிருக்கின்றன. ரூ.1,820 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். எனது ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கம்மசமுத்திரம் ஊராட்சியில் 60 ஆயிரம் லிட்டரும், அடுக்கம்பாடி கட்டுப்படி கிராமத்தில் 60 ஆயிரம் லிட்டரும், திமிரி ஒன்றியம், வளையாத்தூர் ஊராட்சியில் 1 இலட்சம் லிட்டரும், ADC பகுதியில் 60 ஆயிரம் லிட்டரும், கீழ்ப்பாடி ஊராட்சில் 1 இலட்சம் லிட்டரும் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

ஏனென்றால், அவை கட்டப்பட்டு 30 வருடங்கள் ஆகிவிட்டன. ஒருசில இடங்களில் இருக்கின்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை இடித்துவிட்டார்கள். இப்போது தண்ணீர்ப் பிரச்சினை மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு பகுதியிலே பல ஊராட்சிகள் இருக்கின்றன. அவற்றில் சில ஊராட்சிப் பகுதிகளில் நிலவும் தண்ணீர்ப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டார்கள். ஊரக மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் 17 ஆயிரத்து 63 நீர்த்தேக்கத் தொட்டிகள் 624 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த ஊராட்சிகளுக்கு துறை அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்யப்பட்டு, அவை பழுதடைந்திருப்பின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்கள் 1972 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது, அனைத்து கிராமங்களிலும் இருக்கிற மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கப்பட்டு எல்லாப் பகுதிகளுக்கும் குடிநீர் கிடைக்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த 8 ஆண்டுக் காலமாக எங்கள் பகுதிகளிலெல்லாம் repair ஆன tanks–ஐ இடித்துவிட்டு புதிதாகக் கட்டுகிறார்களே தவிர, இப்போதுள்ள மக்கள் தொகைக்கேற்றவாறு கணக்கெடுத்து புதிய tanks–ஐக் கட்டுவதேயில்லை. புது நகர் வந்தால் புதியதாக bore போட்டு அதில் pipeline தான் போட்டு

2020 மார்ச் 20]

தண்ணீர் கொண்டுக்கிறோமே தவிர, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்பட முடியாத ஒரு நிலைமையே இருக்கிறது. ஆகவே, எல்லாப் பகுதிகளிலும், எல்லா கிராமங்களிலும் மக்கள் தொகையைக் கணக்கெடுத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் அனைத்து மக்களுக்கும் வழங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக பல்வேறு திட்டங்கள், குறிப்பாக குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின்கீழ் TWAD மூலமாகவும், கிராமத் திட்டங்கள் மூலமாகவும் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. புதிய scheme வருகிறபோது, அந்த scheme வருகிற இடங்களில் பழைய தொட்டிகளைக் கொடுக்க முடியாது. புதிய scheme–ல்தான் கொடுக்க முடியும். அதைத்தான் நான் இதற்கு முன்னால் சொன்னேன். அதேபோல் நகராட்சி நிருவாகத்தின் சார்பாக புதியதாக 414 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. பழைய நீர்த்தேக்கத் தொட்டிகளை இடித்துக் கட்டுவதல்ல. அதேபோல், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலமாக 43, பேரூராட்சிகள் மூலமாக 688, ஊரக வளர்ச்சித் துறை மூலமாக 17,063, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 11,140 தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. இவையெல்லாம் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 29,348 தொட்டிகள், 1,870 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர், நீர்த்தேக்கத் தொட்டிகள் பழுதடைந்துள்ளன என்று குறிப்பிட்டார்கள். அவருடைய தொகுதியில் எந்த இடத்தில் பழுதடைந்துள்ளன என்று குறிப்பிட்டுச் சொன்னால் கண்டிப்பாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தீர்களென்றால், 2011 வரையில் தினமும், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி போன்ற அனைத்துப் பகுதிகளிலும் குடிநீர் வழங்கக்கூடிய அளவு 4,900 MLD தான். இன்றைக்கு கிட்டத்தட்ட

7,500 MLD வழங்கப்படுகிறது. கிட்டத்தட்ட 2,500 MLD–க்குமேல் தினமும் வழங்கக்கூடிய குடிநீர் அளவு அதிகமாகியிருக்கிறது. இந்தியாவிலே அதிகமாகக் குடிநீர் வழங்குவதில் தமிழ்நாடு Number One ஆகத் திகழ்கிறது. இந்த மாதிரி பல்வேறு சாதனைகளைச் செய்திருக்கிறது. இருந்தாலுங்கூட, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குறிப்பிட்ட பகுதிகளில் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

140—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***53262—திரு. ப. பலராமன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில், பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.

திரு. ப. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், என்னை ஆளாக்கிய பொன்மாதா, புனிதத் தாய், அம்மா அவர்களை